# DEPOSTITION OF WITNESS

# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL

# O.S. No. 133 of 2019

**நீ.ம.சா: 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வல்சன் போஸ் |
| தந்தை பெயர் | : | ரெத்தினமணி |
| கிராமம் | : | கக்கோட்டுதலை |
| வட்டம் | : | கல்குளம் |
| தொழில் | : | உதவி பொறியாளர், நீர்வளத்துறை |
| வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 09.01.2025

**முதல் விசாரணை** :-

இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் உதவி பொறியாளர், நீர்வளத்துறையில் பணியாற்றி வருகிறேன். வடக்கு தாமரைகுளம் சர்வே எண்.220 ல் நீர்நிலை ஆக்கிரமிப்பு அகற்றியது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. தாசில்தார் எனக்கு வழங்கிய ஆக்கிரமிப்பு அகற்றுதல் பற்றிய படிவம்-1 எனக்கு 06.09.2019 ல் வழங்கப்பட்டது. நான் 07.09.2019 ல் படிவம்-2 ன் படி சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நோட்டீஸ் கொடுத்தேன். அதை தொடர்ந்து 18.09.2019 ல் படிவம்-3 ன் படி ஆக்கிரமிப்பு தாரர் ஆத்தியப்பனுக்கு நோட்டீஸ் கொடுத்தேன். அவர் ஆக்கிரமிப்பை அகற்றாததால்

25.11.2019 ல் ஆக்கிரமிப்புகளை நான் அகற்றினேன்.

| | | | |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ 1 | 16.08.2019 | தாசில்தார் நீ.ம.சா.1 க்கு வழங்கிய ஆக்கிரமிப்பு அகற்றுதல் பற்றிய வழங்கிய கடிதம் மற்றும் படிவம்-1 மற்றும் அகஸ்தீஸ்வரம் புல எண்.218 மற்றும் 220 க்கான வரைபடங்கள். | உண்மை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |
| நீ.ம.சா.ஆ 2 | -- | நீ.ம.சா.1 ல் 07.09.2019 ல் படிவம்-2 ன் படி சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட நோட்டீஸ் மற்றும் படிவம்-2 | உண்மை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |
| நீ.ம.சா.ஆ 3 | 07.09.2019 | நீ.ம.சா.1 ல் படிவம்-3 ன் படி ஆக்கிரமிப்பு தாரர் ஆத்தியப்பனுக்கு வழங்கப்பட்ட நோட்டீஸ் மற்றும் படிவம்-3 | உண்மை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |

<u>முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> -

நீ.ம.சா.ஆ 1 ல் உள்ள படிவம் 1 யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் தாசில்தார் அலுவலகத்தில் இருந்து எனக்கு கொடுக்கப்பட்டது. அகஸ்தீஸ்வரம் 220 ல் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற படிவம்1 கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல அகஸ்தீஸ்வரம் புல எண்.218/1 மற்றும் 220 க்கான ஆக்கிரமிப்பை அகற்ற படிவம்1 கொடுக்கப்பட்டது. நீ.ம.சா.ஆ 1 ல் உள்ளகடிதத்தில் அகஸ்தீஸ்வரம் வடக்கு தாமரைகுளம் புல எண்.219 ஏ மற்றும் 220 ல் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் புல எண்.219 ஏ பட்டா நிலம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ 1 ல் உள்ள படிவம் 1 ல் அகஸ்தீஸ்வரம் வடக்கு தாமரைகுளம் புல எண். 220, 218/1, 218/2 சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 2 எங்கள் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம். நீ.ம.சா.ஆ 3 ல் யாருக்கு எதிராக படிவம்-2 அனுப்பப்பட்டது என்றால் ஆத்தியப்பன்

பெயருக்கு அனுப்பப்பட்டது. அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததற்காக ஆத்தியப்பனுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு என சொல்லக்கூடிய பகுதி என்ன என்றால் அரசு புறம்போக்கு கால்வாய். ஆத்தியப்பனுக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு அவர் ஆக்கிரமிப்பை அகற்றினாரா என்றால் அகற்றவில்லை. நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் 25.11.2019 ல் நான் ஆக்கிரமிப்பை அகற்றினேன். நான் அகற்றிய பகுதியின் நீள, அகலம் என்ன என்றால் சர்வே எண்.220 ல் 2 மீட்டர் நீளம் 7.1 மீட்டர் அகலம் அதில் பகுதி ஆக்கிரமிப்பை அகற்றினேன். 218/1 ல் நீளம் 1.8 மீட்டர் அகலம் 2.2 மீட்டர் கட்டிடத்தை அகற்றினேன் மற்றொரு கட்டிடம் நீளம் 2.2 மீட்டர் அகலம் 2.6 மீட்டர் கட்டிடத்தை அகற்றினேன். நான் அகற்றிய பகுதிகள் புறம்போக்கு தானா என்றால் ஆமாம். அதை தவிர மீதி உள்ள பகுதிகள் பட்டா பூமி என்றால் சரிதான். ரோட்டோடு சேர்ந்த பகுதி தான் என்னால் அகற்றப்பட்ட பகுதி என்றால் சரிதான். புறம்போக்கு அகற்றிய பிறகு பட்டா பூமியில் கோவில் இருந்தது என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>2 முதல் 10 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு ஆக்கிரமிப்பாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம். எந்த தேதியில் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு ஆக்கிரமிப்பாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் 25.11.2019 ல். ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு ஆக்கிரமிப்பாளருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்பது குறித்து ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும் இதுவரை ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்னென்ன ஆவணம் இருந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீ.மா.சா.ஆ 1 ல் தாசில்தார் ஆக்கிரமிப்பு பற்றி சொல்லியுள்ளார்.

ஆக்கிரமிப்புதாரருக்கு கொடுத்த அறிவிப்பில் என்னென்ன கட்டிடம் என்னென்ன அளவு என்று சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு முன்பு அளவீடு செய்தேனா என்றால் நீ.ம.சா.ஆ 1 தாசில்தார் அளந்து அளவு சொல்லியிருந்தார். தாசில்தார் எப்போது அளந்தார் என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு முன்பு ஆக்கிரமிப்பாளருக்கும் அருகில் உள்ளவருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை. யார் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அளவிடுக்கு பிறகு ஆட்சேபனைக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டதா என்றால் படிவம்-2 கொடுத்து படிவம்-3 க்கு முன்பாக ஆட்சேபனை தெரிவிக்கலாம். படிவம்-2 கொடுத்து படிவம்-3 ஆக்கிரமிப்பாளருக்கும் அருகில் உள்ளவருக்கும் சார்பு செய்யப்பட்டது என்பது குறித்து ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும் இதுவரை ஆவணம் தாக்கல் செய்யவில்லை எங்கள் அலுவலகத்தில் உள்ளது வேண்டுமென்றால் தாக்கல் செய்யலாம். எத்தனை ஆண்டுகளாக இந்த ஆக்கிரமிப்பு உள்ளது என்றால் தெரியாது. அளக்கும் போது புறம்போக்கு மற்றும் பட்டா சொத்துக்கு இடையில் வேலி இருந்ததா என்றால் இல்லை. நீ.ம.சா.ஆ 1ல் உள்ள வரைபடம் யாரால் தயாரிக்கப்பட்டது என்றால் தாசில்தார். நீ.ம.சா.ஆ 1ல் உள்ள படிவம் 1 ல் அகஸ்தீஸ்வரம் வடக்கு தாமரைகுளம் புல எண். 220, 218/1, 218/2 சொல்லப்பட்டுள்ளது அதில் புல எண். 220 ல் எவ்வளவு செண்ட் ஆக்கிரமிப்பு என்றால் தோராயமாக ¼ செண்ட், புல எண்.218/1 ல் எவ்வளவு செண்ட் ஆக்கிரமிப்பு என்றால் 2 ஏரியா உண்டு தோராயமாக 1 செண்ட் மற்றும் 1¼ செண்ட். சர்வே எந்த இடத்தில் இருந்து அளக்கப்பட்டது என்றால் சர்வேயருக்கு தான் தெரியும். வரைபடத்தை பார்த்தால் சர்வே எந்த இடத்தில் இருந்து அளக்கப்பட்டது என தெரியாது என்றால் குறுவட்ட அளவையறுக்கு

தான் தெரியும். எரர் கணக்கு பார்த்தால் தான் சரியான அளவு கண்டுபிடிக்க முடியும் என்றால் குறுவட்ட அளவையருக்கு தான் தெரியும் அவர் அளந்திருப்பார். அந்த விபரங்கள் நான் தாக்கல் செய்த ஆவணத்தில் இருந்து தெரியவராது என்றால் சரிதான். யாருடைய புகாரின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது, நான் தாக்கல் செய்த ஆவணத்தில் இருந்து தெரியவராது என்றால் சரிதான் ராஜதுரை மற்றும் விவசாயிகள் புகார் அளித்திருந்தார்கள். ராஜதுரைக்காக வேண்டி பொய்யாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறு. பிரதிவாதிகளுக்கு எந்த வித அறிவிப்பும் கொடுக்கப்படாததால் அறிக்கை செல்லாது என்றால் சரியல்ல. நான் ராஜதுரைக்கு ஆதரவாக வேண்டுமென்றே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 10 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**